**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No. C.C. No.273/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: P.W-3, L.W-4 | |
| Name | :Nadesan (Forest Guard) | Defence | : |
| Father Name | : Ammasi | Court | : |
| Village | : Salam Forest Office | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 53/2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.03.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் வனச்சரகத்தில் வன காப்பாளராக உள்ளேன். வழக்கு சமயத்தில் சீர்காழி வனச்சரகத்தில் வன காவலராக பணிப்பரிந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 30/09/2016 அன்று காலை சுமார் 10 மணியளவில் நானும் அ.சா.2 ம், சாப்பிட்டுவிட்டு அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது தென்பாதியில் எங்கள் அலுவலகத்திலிருந்து சுமார் 2 பர்லாங் தூரத்தில் உள்ள விவேகானந்தா பள்ளி உரிமையாளரின் வீட்டு வாசலில் ஒரு சாக்குப்பையுடன் ஆஜர் எதிரி இருச்சக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்தார். அந்த சாக்கில் இரண்டு புள்ளி மூக்கு வாத்துக்கள் இருந்தன. அதில் ஒன்று உயிருடனும், மற்றொன்று இறந்த நிலையில் இருந்தது. பின்னர் எதிரியை மேற்படி வாத்துக்களுடன் அவரது இருச்சக்கர வாகனத்தில் அலுவலகத்திற்கு அழைத்து சென்றோம். பின்னர் அ.சா. 2 ஆஜர் எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் பற்றி விசாரித்தார். அவரிடம் ஆஜர் எதிரி வாக்குமூலம் அளித்தார். பின்னர் வழக்கில் கைப்பற்றிய சொத்துக்களையும், எதிரியையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்கள். கைப்பற்றிய வாத்துக்களில் இறந்த வாத்தை பிரதேச பரிசோதனைக்கு அனுப்பியும், உயிருடன் இருந்த வாத்தை ஆற்றில் விட்டார்கள். அதுதான் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படகளில் உள்ள வாத்துக்கள் . எதிரியிடமிருந்து கைப்பற்றிய வாகனம் எங்களது அலுவலகத்தில்

உள்ளது. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாத்துக்களில் ஒன்று இறந்து உள்ளது . அது **அ.த.சா. 6** ஆகும். ஒன்று தண்ணீரில் விடப்பட்டது அது **அ.த.சா.ஆ 7** ஆகும். வனச்சரக அலுவலர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை.